07.04.2026

OS No: 303/2023

வா.சா. 2 – மெய்யப்பன் த/பெ. திரு. மெய்யப்பன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி எனக்கு என்ன உறவு என்றால் மனைவி ஆவார். பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது குடும்ப அளவில் எனக்கு பழக்கம். தாவா அடமான கடனுக்கான சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண். 161/3, விஸ்தீரணம் 1200 சதுரடி ஆகும். தாவா அடமான கடனுக்கு முன்பாக பிரதிவாதி எனது மனைவியிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் கடன் பெற்றுள்ளார், மேற்படி கடனை திருப்பி செலுத்தியுள்ளார். மேற்படி தாவா கடனுக்கு முன்னாரான கடனுக்கு பிரதிவாதி வெற்று காசோலை மட்டும் கையெழுத்து செய்த எழுதப்படாத பேப்பரை ஆவணமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கடனை செலுத்தியுடன் மேற்படி ஆவணங்களை மீண்டும் பெற்று கொண்டுவிட்டார். தாவா கடன் தொகையானது ரொக்கமாக கொடுக்கப்பட்டதா என்றால் 2000 நோட்டுகளாக 3 பணக் கட்டுகள் என ரூபாய் 6 லட்சம் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. மேற்படி ரூ. 6 லட்சமானது வங்கியில் இருந்து எடுத்துக் கொடுக்கப்பட்டதா அல்லது கையில் இருப்பில் இருந்து கொடுக்கப்பட்டதா என்றால் விவசாயத்தின் மூலம் கிடைத்த பணம் ஆகும். கையில் இருப்பில் இருந்து தான் கொடுக்கப்பட்டது. தாவா கடனுக்கு பிரதிவாதி வட்டி செலுத்தி வந்தாரா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா கடன் தொகைக்கு கொரனா காலத்தில் கூட முறையாக வட்டியும், அசலும் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ. 4 லட்சம் தான் கடனாக பெற்றுயிருந்தார் என்றும் அதற்கு ரூ. 3 லட்சம் வரை வட்டியும் அசலுமாக திருப்பி செலுத்தியுள்ளார் என்றும் மேற்படி சங்கதியை எனது மனைவி தன் சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், மேற்படி சாட்சியத்திற்கு முரணாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பாக்கி கடன் தொகையை செலுத்திட தற்போதும் தயாராக உள்ளார் என்றும், நாங்கள் அதை மறுத்து ரூ. 6

லட்சத்தை கொடுக்க வேண்டுமென கேட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் வாதி  கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.07 16:05:45 +0530